வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 17.10.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் ஆறுகள், **பாரம்பரியச் சின்னமாக மட்டுமின்றி வளர்ச்சிக்கான நெடும் பாதையாகவும்** திகழ்வதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

நாட்டின் **ஒட்டு மொத்த சரக்கு போக்குவரத்து செலவு**. ஒற்றை இலக்க அளவிற்கு குறையும் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் தறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

பீகாரில், **முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான** வேட்பு மனு தாக்கல், இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது.

புதுச்சேரியில், குடும்ப அட்டைதாரர்களுக்கு, **தீபாவளி பரிசுத் தொகுப்பு** வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

மோடி-கட்டுரை

இந்தியாவின் ஆறுகள், பாரம்பரியச் சின்னமாக திகழ்வதற்கு அப்பாற்பட்டு, வளர்ச்சிக்கான நெடும்பாதையாகவும் விளங்குவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இதுகுறித்து மத்திய கப்பல் மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு, நீர் வழிப் பாதைகளை புத்தாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார். நாட்டில் சரக்கு போக்குவரத்து,

சுற்றுலா, மற்றும், உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டில் நீர்வழிப் பாதைகளின் பங்களிப்பு குறித்து, அமைச்சர் தமது கட்டுரையில் எடுத்துக் கூறி உள்ளார்.

*ராஜ்நாத்*

**இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் நாசிக் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட, முதலாவது, தேஜஸ் MK-1A இலகுரக போர் விமானத்தின் முதல் பயணத்தை, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்** இன்று தொடக்கி வைத்தார். பாதுகாப்பு உற்பத்தியில் சுயசார்பை எட்டுவதற்கான நாட்டின் பயணத்தில், இது முக்கிய மைல்கல் என்று அவர் கூறினார். 2014-ஆம் ஆண்டிற்கு முன்னர், பாதுகாப்புத் துறைக்கு தேவையான 65 முதல் 70 சதவிகித ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், இதில் சுமார் 65 சதவிகிதம், தற்போது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார். இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனத்தின் நாசிக் தொழிற்சாலையில், HTT-40 ரக **பயிற்சி விமானங்களைத்** தயாரிக்கும் வசதிகளையும், பாதுகாப்பு அமைச்சர், இவ்விழாவின் போது தொடக்கி வைத்தார். இந்திய விமானப் படையில் மிக்-21 ரக விமானங்களுக்கு பதிலாக சேர்த்துக் கொள்ளப்படும் புதிய **தேஜஸ் இலகுரக போர்** விமானங்கள், வான் பாதுகாப்பில் மட்டுமின்றி, தரைவழித் தாக்குதல் மற்றும் கடல்வழித் தாக்குதலுக்கும் பயன்படும் என்பது, குறிப்பிடத் தக்கது.

*விமானப் □டை□*

இந்தியா, உலகின் 4-ஆவது பெரிய பொருளாதாரம் என்ற அந்தஸ்துக்கு ஏற்ப, பெரிய அளவிலான **பாதுகாப்பு உற்பத்திச் சூழல்** ஒன்றை உருவாக்கி வருவதாக பாதுகாப்புத் துறை செயலர் திரு ராஜேஷ் குமார் கூறி உள்ளார். **விமானப் படைக்கு தேவையான முக்கிய தொழில் நுட்பங்களை உள்நாட்டிலேயே உருவாக்குதல்** என்பது குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், பாதுகாப்புத் துறைக்கான சில முக்கிய தொழில் நுட்பங்களில், இந்தியா ஏற்கனவே உயர் நிலையை எட்டி இருப்பதாகவும், இத்தொழில் நுட்பங்களை பாதுகாப்புத் துறையின் பயன்பாட்டிற்கு விரைந்து மாற்றுவதில் முக்கிய கவனம் செலுத்தப் படுவதாகவும் கூறினார். நாட்டின்

பாதுகாப்பு உத்திகளில் விமானப் படைக்கு முக்கியத்துவம், அதிகம் என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

*கட்கரி-அசோச்சேம்*

நாட்டின் ஒட்டு மொத்த சரக்கு போக்குவரத்து செலவு. இவ்வாண்டு இறுதிக்குள், ஒற்றை இலக்க அளவிற்கு குறையும் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் தறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில், அசோச்சேம் தொழில்-வர்த்தக கூட்டமைப்பின் ஆண்டு மாநாட்டில் உரையாற்றிய அவர், சரக்கு போக்குவரத்து செலவினால் ஏற்றுமதி பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டே போக்குவரத்து வசதிகள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க, அரசு மிகுந்த முக்கியத் துவம் அளித்து வருவதாக கூறினார். மத்திய அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்……

(வாய்ஸ்)

*கட்கரி-அசோச்சேம்*(வாய்ஸ்)

மாற்று எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதில், அரசு, முக்கிய கவனம் செலுத்தி வருவதாக, மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்தார். குறிப்பாக வேளாண் துறையின் செயல்பாடுகளை, மின்சாரம் மற்றும் எரிசக்தி துறைக்கு விஸ்தரிப்பதன் மூலம், புதைவடிவ எரிபொருளை நம்பியுள்ள நிலையை மாற்றவும் எரிசக்தி இறக்குமதியை குறைக்கவும் ஏதுவாகும் என்று அவர் கூறினார். சுற்றுச்சூழல் ரீதியிலான பொறுப்புணர்வுடன், உலகின் எரிசக்தி ஏற்றுமதி நாடாக மேம்படும் தகுதி, இந்தியாவிற்கு இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். நாட்டில் ஏற்கனவே குவிந்துள்ள திடக் கழிவு முழுவதும் 2027-ஆம் ஆண்டிற்குள், சாலை அமைப்பு பணிகளுக்கு, பயன்படுத்தி முடிக்கப்படும் என்று திரு நிதின் கட்கரி மேலும் கூறினார்.

*பீகார்*

பீகாரில் நவம்பர் 6-ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது. கடைசி நாளான இன்று, மூத்த பிஜேபி தலைவரும் மாநில சுகாதார அமைச்சருமான திரு மங்கல் பாண்டே, சிவான்

தொகுதியிலும், மாநில உணவுத் துறை அமைச்சர் திருமதி **லேஷி சிங்,** ஐக்கிய ஜனதா தள வேட்பாளராக, **தம்தாஹா தொகுதியலும்** வேட்பு மனு தாக்கல் செய்தனர். இதற்கிடையே பீகாரில், முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்து வருகிறது. மத்திய அமைச்சர் திரு அமித் ஷா, இன்று **சரன்** மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் உரையாற்றுகிறார். கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த், மற்றும் பல்வேறு மத்திய அமைச்சர்களும், பீகாரில், பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்..

*நக்சலைட்*

சட்டீஸ்கர் மாநிலத்தின் **வடக்கு பஸ்தார்** பகுதியில் இன்று 208 நக்சலைட்டுகள், ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, அதிகாரிகளிடம் சரண் அடைந்துள்ளனர். இதில், ஆண்களை விட அதிக எண்ணிக்கையில், 110 பெண் நக்சலைட்டுகளும் அடங்குவர். இவர்கள் ஒப்படைத்த 153 ஆயுதங்களில், 19 ஏகே-47 ரக துப்பாக்கிகளும் அடங்கும் என, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

*தீ□ாவளி-ரங்கசாமி*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், 3.46 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு, சர்க்கரை, எண்ணெய் உள்ளிட்ட 6 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய **தீபாவளி பரிசுத் தொகுப்பு** வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். இலவச அரிசியும், ரேஷனில் வழங்கப்படுவதாக, அவர் பின்னர் செய்தியாளரிடம் பேசுகையில் கூறினார். கோதுமை வழங்க டெண்டர் விடப் பட்டுள்ளதாகவும், அடுத்த மாதம் முதல், அனைத்து ரேஷன் அட்டைகளுக்கும் **2 கிலோ கோதுமை** வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கேள்வி ஒன்றுக்கு முதலமைச்சர் பதில் அளிக்கையில், எதிர்கட்சி தொகுதிகள் உட்பட அனைத்து தொகுதிகளுக்கும் சமமாக, திட்டப் பணிகளை தாங்கள் செயல்படுத்தி வருவதாகவும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு முழு **அதிகாரம் தேவை** என்பதை, தொடர்ந்து வலியுறுத்துவோம் என்றும் கூறினார்.

*தீ□ாவளி-□ாதுகாப்பு*

புதுச்சேரியில் மக்கள் தீபாவளித் திருநாளை பாதுகாப்பாகவும், ஆரோக்கியமான முறையிலும் கொண்டாட சுகாதாரத் துறை பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. சட்டப்பூர்மான பசுமைப் பட்டாசுகளை உரிய அனுமதி பெற்றக் கடைகளில் மட்டுமே வாங்குதல், பள்ளிக், கல்லூரி உள்ளிட்ட அமைதிப் பகுதிகளைத் தவிர்த்து, திறந்த வெளியில் பட்டாசு வெடித்தல், பட்டாசு வெடிக்கும் போது எளிதில் தீப்பிடிக்காத பருத்தி ஆடைகளை அணிதல், அவசர நிலையில் தீயை அணைக்க, தண்ணீர் மற்றும் மணலை தயார் நிலையில் வைத்திருத்தல், பெரியவர்களின் மேற்பார்வையின்றி குழந்தைகள் பட்டாசு வெடிப்பதை தவிர்த்தல் ஆகியன இதில் அடங்கும். புதுச்சேரியில் இம்முறை குழந்தைகள் பாதுகாப்பாக பட்டாசு வெடிக்க, இலவச கண்ணாடிகள் வழங்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

*காரைக்கால்*

காரைக்காலில், புதிய பேருந்து நிலையம் அருகே வர்த்தக சபை கட்டிடத்தில் மாவட்ட அளவிலான மகளிர் சுய உதவிக் குழுவினரின் உற்பத்தி பொருட்கள், தரமான வகையில் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தீபாவளியை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள இந்த சிறப்பங்காடி மற்றும் கிராமச் சந்தையை பொது மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என காரைக்கால் மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*ஜிஎஸ்டி- அஸ்ஸாம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், அஸ்ஸாமில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு **செய்தித் தொகுப்பு……..**

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி- அஸ்ஸாம்*

**(வாய்ஸ்)**

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் அஸ்ஸாமில், விவசாயிகள், நெசவாளர்கள், மற்றும், சிறு வணிகர்களுக்கு, பெரிய நிவாரணமாக அமைந்துள்ளன. பிராந்திய அளவிலான பாரம்பரியப் பொருட்கள் மீது, வரிக் குறைப்பு அறிவிக்கப் பட்டுள்ளதால், அஸ்ஸாமில் குறிப்பாக தேயிலை உற்பத்தியாளர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர். தேயிலை மீதான ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில், தேயிலையின் விலை குறைந்து, போட்டித் திறன் அதிகரிக்க, வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அஸ்ஸாமின் பாரம்பரிய மூகா காமோசா பட்டுத் துண்டுகள் மீதான வரியும். 12 சதவிகித ஜிஎஸ்டி அடுக்கில் இருந்து, 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதால், நெசவாளர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர். 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையுள்ள ஓட்டல் அறை வாடகை மீதான ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், அஸ்ஸாமில் சுற்றுலாத் துறையினரும் உற்சாகம் அடைந்துள்ளனர். புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், பண்டிகை காலத்திற்கு அப்பாலும், விற்பனையை அதிகரித்து, வேலை வாய்ப்புகளை பெருக்குவதன் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

*புதுச்சேரி-அறிவிக்கை*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 618 அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் பணியிடங்களை நிரப்ப ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்கை, தொழில் நுட்பக் காரணங்களால் ரத்து செய்யப்படுவதாகவும், புதிய விண்ணப்பங்களை வரவேற்று, விரைவிலேயே மீண்டும் அறிவிக்கை வெளியிடப்படும் என்றும், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அறிவித்துள்ளது. ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள், மீண்டும் விண்ணப்பிக்க தேவை இருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*வானிலை*

இன்று தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை, நீலகிரி, தஞ்சை-நாகை-திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களில்

ஓரிரு இடங்களில் கனமழைக்கும், நெல்லை, குமரி, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளைய தினம், கேரளா-கர்நாடகா கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என்றும், இது, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம் நாலுமுக்கு பகுதியில், 16 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 3 சென்டிமீட்டர் மற்றும் காரைக்காலில் 2 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*மகளிர் கிரிக்கெட்*

உலக கோப்பைக்கான ஐசிசி மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், இலங்கை-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே, இன்று கொழும்பில் நடைபெறும் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடும் இலங்கை அணி, மழையினால் ஆட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படும் வரை, 12 ஓவர்களில். 2 விக்கெட் இழப்பிற்கு, 46 ரன் எடுத்திருந்தது.

*வேளாண்மை-கூட்□ம்*

பிரதமரின் **தன-தான்ய கிருஷி** திட்டம், மற்றும், **பயறு வகைகளுக்கான சுயசார்பு இயக்கம்** குறித்து, மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் இன்று புதுடெல்லியில் உயர்நிலைக் கூட்டம் ஒன்றை நடத்தி, இத்திட்டங்களை காலக்கெடு அடிப்படையில் அமல்படுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். வரவிருக்கும் நாட்களில் இதுகுறித்து, 11 துறைகளுக்கான மத்திய அமைச்சர்களுடன் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்த இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் ஆறுகள், பாரம்பரியச் சின்னமாக மட்டுமின்றி வளர்ச்சிக்கான நெடும் பாதையாகவும் திகழ்வதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

நாட்டின் ஒட்டு மொத்த சரக்கு போக்குவரத்து செலவு. ஒற்றை இலக்க அளவிற்கு குறையும் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் தறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

பீகாரில், முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது.

புதுச்சேரியில், குடும்ப அட்டைதாரர்களுக்கு, தீபாவளி பரிசுத் தொகுப்பு வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------